பதிவு எண் : எம். 6311 ★ தொலைபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர் : 15] சென்னை : கார்த்திகை 6௨ (22—11—67) புதன் வெளியூர் : கார்த்திகை 7௨ (23—11—67) வியாழன் [இதழ் : 133

சீனுவில் சோழர் கல்வெட்டுகள்

சுவான்சங், நவ. 22—

சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்திய இரண்டு தமிழ்க் கல்வெட்டுகள் சீனுவில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

இராசேந்திர சோழன் போன்ற இடைக்காலச் சோழர்கள் காலத்தில் இந்தக் கல்வெட்டுச் செதுக்கப்பட்டு, சீனுவில் அமைக்கப்பட்டதாகக் கருதப் படுகிறது.

சீனுவின் சுவான்சங் நகரில் கண்டு பிடிக்கப்பட்ட இக்கல்வெட்டு களில் தமிழில் 6 வரிகளும், சீன மொழியில் ஒரு வரியும் செதுக்கப்பட்டுள்ளன!

'தர்ம'மா? 'வீர'மா?

'சுடுகிறதா' என, குட்டியின் விரலைவிட்டுப் பார்க்குமாம் தாய்க் குரங்கு!

கல்கத்தாவில் 'பரீட்சை' நடத்துவதற்குப் பத்து மணி நேரத் திற்கு முன்பாக அரியானுவில் ஒரு பலப் பரீட்சை நடத்தி வெற்றி கண்ட களிப்பில், இரவோடு இரவாக வங்காளத்திலும் 'வாகை' சூடி யிருக்கிறது மத்திய அரசு!

கல்கத்தா 'ஸ்டேட்ஸ்மன்' இதழில் கேலிச் சித்திரம் போட்டவர் இதயம் துணுக்குறத்தான் செய்வார்! அரியானுவில் 'ராவ் வீரேந்திர சிங்'கை அழஅழ அடித்துவிட்ட வேகத்தில், சவாண், அஜாய் முகர்ஜியின்மீது மோதி — நிமிர்ந்து—ஆச்சரியத்துடன் விழித்துப் பார்ப்பது போலவும், ஆனுல் அஜாய் முகர்ஜியோ கற்பாறைபோல் ஆடாமல் நிமிர்ந்து நிற்பது போலவும் சித்திரம் வெளியிட்டிருந்தது நேற்றைய 'ஸ்டேட்ஸ்மென்' இதழ்!

சனநாயக அமைப்போ அரசியல் நடைமுறைகளோ காக்கப் படவேண்டுமென்பதில், வங்காள விவகாரத்தில், 'நாட்கள்'தான் பிரச்சினையாகி இருக்கின்றன!

டிசம்பர் 18-க்கும் அதற்கு முன்பாக -- உடனடியாக -- ஒரு நாளுக்கும் எழுந்த வேறுபாடுதான், இன்று இந்தியாவில் பெரும் பான்மையாக இருந்த காங்கிரசல்லாத மாநிலங்களின் எண்ணிக் கையை, ஒன்பதிலிருந்து ஏழாக மாற்றியிருக்கிறது!

அஜாய் முகர்ஜியும், அவரது அமைச்சரவையும் உறுதியாயிருந் தது, 'டிசம்பர் 18-ந் தேதிக்கு முன்னுல் சட்டமன்றம் கூட்டப்படுவ தற்கில்லை' என்ற ஒரு விஷயத்தில்தான்;

அதேபோல், உறுதியாக இருந்தது, அதற்குமுன்னுல் -- உட னடியாக -- 'ஒருநாளில் சட்டமன்றம் கூட்டப்படவேண்டும்' என்ப தில்தான்!

இந்த இரண்டு உறுதிகளுக்குப் பின்னுல் ஒளிந்திருந்தவைகள் ஏராளம்! ஆனுல், வெளிப்படையாக விவாதத்துக்கு வருபவை இவைதான்!

டிசம்பர் 18-ம் நாள்வரை அவகாசம் தந்தால் அஜாய் முகர்ஜி 'சமாளித்து'விடுவார் என்பது, காங்கிரசின் கருத்து—மத்திய அர சின் மதிப்பீடு! இதற்கு, கவர்னரின் அதிகாரம் பயன்பட்டிருக் கிறது!

அமைச்சரவையின் அறிவுரை இல்லாமலேயே சட்டமன்றத் தைக் கூட்டுவதற்குக் கவர்னருக்கு அதிகாரம் உண்டா இல்லையா என்ற பிரச்சினைக்குத் தலைமை நீதிமன்றம் தீர்ப்பு வழங்கவேண்டு மென்பதில், அஜாய் முகர்ஜிக்கு அக்கறை இருக்கிறதோ இல்லையோ —இடைப்பட்ட நாட்களில், இழந்த பலத்தினைத் திரும்பவும் பெற முயற்சிப்பதும் அவரது அந்தரங்க திட்டமாக இருந்திருக்கக்கூடும்!

"அஜாய் முகர்ஜி' ஏன் கவர்னரின் கருத்துப்படி முன்பாகவே ஒரு நாள் சட்டமன்றத்தினைக் கூட்ட சம்மதித்திருக்கக்கூடாது" என்று கேட்பதனைவிட,

> **"அவருக்கு அவகாசம் தருவதன் மூலம் அமைச்சரவை யின் சக்தியை ஒன்று திரட்ட முயற்சிக்கிருர்; எனவே, இது தான் சமயம்; உடனடியாகக் கூட்டச் சொல்லி, அதற்குள், 'போதிய பலம் இல்லை' என்பதை நிரூபித்துவிடுவோம்; அதற்குச் சம்மதிக்காமல் அமைச்சரவையே 'டிஸ்மிஸ்' செய்துவிடுவோம்"**

என்ற அரசியல் மனப்போக்கில் கவர்னர் செயல்பட்டிருப்பது சரியா என்று கேட்பதுதான் மிகவும் வலிவுடையதாக இருக்கிறது!

இந்த அடிப்படையில்தான், அஜாய் முகர்ஜி, கருத்து மாறுபாடு களைக் கடந்த அனுதாபத்தினைப் பெறுகிருர்!

அமைச்சரவையின் ஆயுளை எப்படியும் காப்பாற்றுவதற்கு அஜாய் முகர்ஜி பாடுபட்டதில், ஒரு அரசியல் நியதியாவது இருக்கும்.

ஆனுல் இடைப்பட்ட காலத்தில், 'அஜாய் பெரும்பான்மை பெறுவதை எப்படியும் தடுக்க வேண்டும்' என்று கவர்னர் இயங்கு வதில் அல்லது அவரை இயங்கவைப்பதில் பொருள் இருக்க முடியாது!

★ **காங்கிரசின் பலம் அந்தரத்தில் இருக்கும் மாநிலத்தில், கவர் னர்—மத்திய அரசு நடந்துகொள்வது ஒருவகை;**

★ **காங்கிரசல்லாத மாநிலத்தில் கவர்னர்—மத்திய அரசு நடந்து கொள்வது மற்றொரு வகை;**

என்ற அழித்தெழுத முடியாத கருத்தினை, சென்ற முறை கேரளத் தில் துவக்கிவிட்ட புதுடில்லி, 1967-க்குப் பின்னரும், பீகார்— இராஜஸ்தான்—அரியாஞு—வங்காளம் என்று தொடர்ந்து கடை பிடிக்கிறது!

உண்மையிலேயே, 'அஜாய் முகர்ஜியின் அமைச்சரவை வலி வற்றது' என்று புதுடில்லி கருதியிருக்குமானுல், அதை மேலும் உறுதிப்படுத்திக் காட்டியிருக்க வேண்டிய பொருத்தமான இடம், சட்டமன்றம்—இராஜபவனம் அல்ல!

(இதன் தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

காதில் விழுந்தது!

காங்கிரசுக்காரர் :—

"ஒன்பது, ஒன்பது என்று பெருமைபட்டுக்கொண்டிருந்தீர்களே — இப்போது எங்கள் ஆட்சியில்லாத மாநிலங்கள் ஏழாகிவிட்டன! பத்தே மணி நேரத்தில் ஒன்பது ஏழு ஆகிவிட்டது! இப்போது என்ன சொல்லுகிறீர்கள்?"

கட்சி ஏதும் சாராத அவரது நண்பர் :—

"சொல்வதற்கு ஏதும் இல்லை; 'ஏழு' என்பதை இன்னும் எப்படிக் குறைக்கலாம் என்று வேண்டுமானுலும் பாருங்கள்; ஆனுல் அதே சமயம் 'தலை'யே போய்விடாமலும் கவனித்துக்கொள்ளுங்கள்! 'அரியாஞு, வங்காளம்—என்று இப்படிக் கைவைத்துக்கொண்டே போனுல், 'புதுடில்லி'யே போய்விடும்' எனச் சிலர் எச்சரித்திருக்கிருர்கள்; இதனை நெஞ்சத்தில் இருத்துங்கள்!"

காலத்தே 'பயிர் செய்கிருர்' பஞ்சாப் முதலமைச்சர்!

கட்சி மாறியவருக்குப் பதவி!

மூன்று புதிய பாராளுமன்றச் செயலாளர்கள் பதவிகளை ஏற்படுத்தியிருப்பதன் மூலம் பஞ்சாப் முதலமைச்சர் குர்நாம் சிங், நேற்று தனது அமைச்சரவையின் உறுப்பினர் எண்ணிக்கையை 20-ஆக உயர்த்தியிருக்கிருர்!

புதிய மூவரில் ஒருவர், காங்கிரசிலிருந்து கட்சி மாறி அவர் பக்கம் வந்தவர்!

பஞ்சாப் சட்டமன்றத்தின் உறுப்பினர் எண்ணிக்கை 104; இதில், ஆளும் கட்சியின் பலம் 57-ஆக இருக்கிறது!

கல்கத்தா நகருக்குள் ராணுவம்

சனநாயக விரோதச் செயலுக்குப் பாதுகாப்பு

கல்கத்தா, நவ. 21—

மேற்கு வங்க அமைச்சரவை நீக்கப்பட்டுப் புதிய அமைச் சரவை ஏற்படுத்தப்பட்டதை அடுத்து, கல்கத்தாவிலும், சுற்றுப் புறங்களிலுமுள்ள தொழிற்சாலைப் பகுதிகளில் இன்றிரவு இ.பி.கோ. 144-வது பிரிவின் கீழ் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மாவட்டங்களிலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறு போலீசு அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கின்றனர்.

இராணுவமும் முன்னெச்சரிக்கையாக இருக்கும்படிக் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

இராணுவத்தினரை ஏற்றிக்கொண்டு 60.க்கு மேற்பட்ட டிரக்குகள் இன்று மாலை கல்கத்தா நகருக்குள் வந்துள்ளன; சிவில் அதிகாரிகளுக்கு உதவ இவர்கள் ஆயத்தமாக இருப்பார் களாம்.

அமைச்சரவை நீக்கம்-- உடனடி விளைவுகள்

கல்கத்தா, நவ. 22—

மேற்கு வங்க அமைச்சரவை நீக்கப்பட்ட செய்தி, முதலமைச்சர் அஜாய் முகர்ஜிக்கு இரவு 8-10 மணிக்குத் தரப்பட்டது; அப் போது அவர், பீகார் முதலமைச்ச ரிடம் பேசிக்கொண்டிருந்தார்.

தேநீரில் விளைந்த புயல்!

பீகார் முதலமைச்சருடன் அமர்ந்து தேநீர் அருந்திக்கொண் டிருந்த நேரத்தில் அமைச்சரவை நீக்க உத்தரவு அவரிடம் தரப்பட் டது; இதுகுறித்து முகர்ஜி, 'தேநீ ரில் விளைந்த புயல்' என்று குறிப் பிட்டார்.

பத்துமணி நேரத்தில்...

அரியாஞு அமைச்சரவை நீக்கப் பட்ட 10 மணி நேரத்தில் இரண் டாவதாக மேற்கு வங்க அமைச்ச ரவை நீக்கப்பட்டிருக்கிறது!

இதுபற்றி அஜாய் முகர்ஜி குறிப் பிடுகையில், 'கவர்னரின் செயல் சட்டவிரோதமானது; அரசிய லமைப்புச் சட்டத்தை மீறியது' என்று அவர் கூறினுர்.

கடையடைப்பு!

கூட்டணி அமைச்சரவை நீக்கப் பட்டது கேட்டு, மேற்கு வங்கம் முழுவதும் கொதிப்படைந்திருக்கி றது; கடையடைப்பு—வேலைநிறுத் தம் மேற்கொள்ளக் கூட்டணிக் கட்சிகள் அனைத்தும் சேர்ந்து வேண்டுகோள் விடுத்துள்ளன.

கூட்டணி அமைச்சரவை நீக்கப் பட்ட செய்தி கேட்டவுடன், நகரில் ஓடிக்கொண்டிருந்த டிராம் வண்டி களெல்லாம் நிறுத்தப்பட்டன.

கைதுசெய்ய உத்தரவு

சட்ட ஒழுங்கை நிலைநாட்டத் தேவைப்பட்டால் கைதுசெய்ய வும் மாவட்ட அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

தலைவர்கள் கண்டனம்

மேற்கு வங்க கூட்டணி அரசு நீக்கப்பட்டதையடுத்து அரசியல் தலைவர்கள் தெரிவித்துள்ள கருத்துக்கள் வருமாறு :—

மது லிமாயி (ச. சோ.)

"இது ஒரு சனநாயகக் கொலை; மக்கள் இந்தச் செயலை தங்களது முழுவலிமையுடன் எதிர்த்து நிற்கவேண்டும்."

என். சி. சாட்டர்ஜி (சுயே)

"டில்லி அக்கிரமச் செயல் புரிந்து சனநாயகத்தை அழித்

(4-ம் பக்கம் பார்க்க)

இரவோடு இரவாக...!

வங்காள அமைச்சரவை கலைப் புப் பற்றிய செய்தி, 'பரம இரகசிய'மாக வைக்கப்பட் டிருந்திருக்கிறது!

மாலையில்—அலுவல் நேரத்துக் குப் பின்னரும், அரசுத் தலை மைச் செயலாளரும், துணைச் செயலாளர்களும் அரசின் செய லகத்திலேயே இருந்தது, செய்தியாளர்களுக்குச் 'சந்தே க'த்தைக் கொடுத்திருக்கிறது!

இரவு 7 மணியளவில் தலை மைச் செயலாளர், 'இராஜ பவன்'ம் நோக்கிப் போயிருக் கிருர்! செய்தியாளர்களும் பின் தொடர்ந்தனர்!

இரவு சுமார் 8-15 மணியள வில், செய்தியாளர்கள் உள்ளே அனுமதிக்கப்பட்டபோது, அங்கே டாக்டர் கோஷ் முத லமைச்சராகப் பதவியேற்பு உறுதிமொழி செய்துகொண் டிருப்பதைக் கண்டனர்!

"ஐக்கிய முன்னணி அமைச் சரவை 'டிஸ்மிஸ்' செய்யப்பட் டது" என அப்போதுதான் செய்தியாளர்களுக்குத் தெரி விக்கப்பட்டது!

முரசொலி மாறன் டில்லி பயணம்

விமான நிலையத்தில் சிறப்பான வழியனுப்பு

சென்னை, நவ. 22—

தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள தோழர் 'முரசொலி' மாறன், நாடாளுமன்றக் கூட்டத்தில் கலந்து கொள்ளும்பொருட்டு இன்று புதுடில்லிக்குப் பயணமானுர்.

மீனம்பாக்கம் விமான நிலையத்தில் அவருக்குச் சிறப்பான வழி யனுப்பு நடத்தப்பட்டது.

ஆயிரக்கணக்கானோர் குழுமியிருந்து வாழ்த்தொலி எழுப்பி வழியனுப்பிவைத்தனர்.

பொதுப்பணித்துறை அமைச் சர் திரு. மு. கருணுநிதி, சுகாதார அமைச்சர் திரு. சாதிக் பாட்சா, சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆதித்தனுர், அரசுத் தலைமை வழக்குரைஞர் கே. நாராயணசாமி (முதலியார்), அரசு வழக்குரைஞர் திரு. பி. ஆர். கோகுலகிருஷ்ணன், மேயர் இரா. சமபந்தம், நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராம சாமி, நடிகமணி டி. வி. நாராயண சாமி, சென்னை மாவட்டச் செய லாளர் நீலநாராயணன், வ. ஆ. மாவட்டச் செயலாளர் இரா. தரும லிங்கம், மற்றும் பலர் மாலையணி வித்து வழியனுப்பினர்.

திருச்சி மாவட்டச் செயலாளர் அன்பில் தர்மலிங்கமும், மாறனு டன் டில்லி செல்கிருர்.

நம்நாடு
ஆசிரியர் : இரா. செழியன் எம். ஏ. எம்பி

திருவள்ளுவராண்டு 1998 கார்த்திகை 6 (22—11—67) புதன்

இந்திவெறியர்களின் சதி!

ஆட்சி மொழி—பாட மொழி—தொடர்பு மொழி—என்ற போர்வையில், இந்திய மொழிகள் அனைத்திலும் வளம் குறைந்த இந்தி மொழிக்கு ஏற்றம் தேடுவதில், இந்தி வெறியர்கள் கச்சையை வரிந்து கட்டிக்கொண்டிருக்கின்றனர். இந்த இந்தி வெறியர்களின் தளபதியாக சேத் கோவிந்த தாஸ் என்பவர் இருக்கின்ருர்.

இராணுவத் தாக்குதல் நடத்தி தமிழகத்தில் இந்தித் திணிக்கப் படும்—என, சில நாட்களுக்குமுன், இந்த வெறியர்தான் கூறிஞர். இக்கூற்றைத் தமிழக முதலமைச்சர் அண்ணு அவர்கள் கண்டித்தார்; கண்டித்ததுடன், கோவிந்த தாசின் அறைகூவலை அவர் ஏற்றும் கொண்டார்.

தமிழக முதலமைச்சரின் இக்கண்டனத்தைக் கேட்டதும், 'இராணுவத்தைக் கொண்டு தமிழகத்தில் இந்தியைத் திணிக்கப் படும் என நான் கூறவில்லை' என பின்னர் அவர் கூறிவிட்டார். இருந்தாலும், 'இந்திய ஒருமைப்பாட்டிற்கு ஊறு தேடுகின்றவர்களை இராணுவத்தைக் கொண்டு அடக்கப்படும்' என்றுதான் தாம் கூறியதாக அவர் விளக்கமும் தந்தார்.

இந்தி மொழிக்கு ஏற்றம் தேடுவது ஒன்றை மட்டுமே குறியாகக் கொண்ட கோவிந்த தாஸ் போன்ற இந்தி வெறியர்கள், தங்களுடைய மொழி வெறிக்குக் கிடைத்திருக்கின்ற எதிர்ப்பைக் கண்டு, இந்தி மொழியுடன் மற்ற இந்திய மொழிகளையும் பிணைத்துப் பேச ஆரம்பித்திருக்கின்ருர்கள்; அதாவது, பாடமொழியாக இருந்துவரக்கூடிய ஆங்கில மொழிக்குப் பதிலாக, 'இந்திய மொழிகள், அது அது வழங்கப்படும் பகுதிகளில் பாட மொழிகளாக ஆக்கப்பட வேண்டும்' என்று புதுக் கதை படிக்க ஆரம்பித்துள்ளனர்.

'ஆங்கிலத்துக்குப் பதிலாக இந்தி மொழி பாடமொழியாக ஆக்கப்பட வேண்டும்' என இந்தக் கட்டத்தில் வற்புறுத்தினுல், இந்தி பேசாத பகுதி மக்களிடமிருந்து வருகின்ற எதிர்ப்பு, மேலும் பலமடங்கு பெருகிவிடும் என்ற உண்மையை, கோவிந்த தாஸ் போன்ற இந்தி வெறியர்கள் உணர்ந்து கொண்டுவிட்டனர். இப்பெரும் எதிர்ப்பை எப்படியாவது தணித்துவிட வேண்டும் எனத் தீர்மானித்து, இந்தி வெறியர்கள், 'வட்டார மொழிகளைப் பாட மொழிகளாக ஆக்கவேண்டும்' என வலியுறுத்திக் கூறிவருகின்றனர்.

ஆங்கிலத்துக்குப் பதிலாகத் தங்கள் தாய்மொழிகள் பாட மொழிகளாக வேண்டும் என விரும்பாதவர்களைக் காண்பது அரிது. இப்படி, தத்தம் தாய்மொழிகளைப் பாட மொழிகளாக்க வேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்கிவிடும்பட்சத்தில், இந்தி பேசாத பகுதி மக்களுக்கு இந்தி மொழிமீது உள்ள கசப்பை, ஆங்கில மொழிக்கு எதிராகத் திசை திருப்பிவிட முடியும் என்பது இந்தி வெறியர்களின் உள்ளக்கிடக்கை. இது ஓரளவுக்கு, இந்தி வெறியர்கள் எதிர்பார்ப்பதுபோல் பயன்பட்டும் வருகிறது.

இந்தி நீங்கலாக இந்திய மொழிகள் அனைத்தும் பாட மொழிகளாக ஏற்றம் பெறுவதற்கு ஆங்கில மொழிதான் இடையூருக இருக்கிறது என்ற நினைப்பை, இந்தி பேசாத பகுதி மக்கள் உள்ளத்தில் எப்படியும் விதைத்துவிட வேண்டும் என, இந்தி வெறியர்கள் எடுத்துவரும் முயற்சியில் மறைந்துகிடக்கின்ற உண்மையை, இந்தி பேசாத பகுதி மக்கள் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும்.

ஆங்கிலம் ஆட்சிமொழியாகவும், பாட மொழியாகவும் ஆக்கப்பட்டுவிட்டதால், இந்திய மொழிகள் அனைத்தும் வளங்குன்றிவிட்டது என்பது வெறும் கற்பனை அல்ல; இக்கருத்தில் ஓரளவுக்கு உண்மை இருக்கத்தான் இருக்கிறது.

அதுபோலவேதான், இந்தி ஆட்சி மொழியாகவும் பாட மொழியாகவும் ஏற்றம் பெறுகின்ற நாளில், இந்தி நீங்கலாக மற்ற இந்திய மொழிகள் அனைத்தும், தத்தம் வளர்ச்சியை இழந்துவிடும் என்பது, மறுக்கமுடியாத உண்மையாகும். ஆங்கில மொழியால் மட்டுந்தான் இந்திய மொழிகளுக்கு அத்தகு கேடு நேர்ந்துவிட்டிருக்கிறது என்பதில்லை. ஆங்கிலத்தின் இடத்தில், இந்தி மொழி ஏற்றப்பட்டாலும், மற்ற இந்திய மொழிகளுக்கு ஏற்படக்கூடிய கேடும் மாறுபட்டதாக இருந்திட முடியாது.

ஆங்கிலத்திற்குப் பதிலாக இந்தி, ஆட்சி மொழி—பாட மொழி—தொடர்பு மொழியாக ஆக்கப்பட்டாலும் சரி; அல்லது வேறு ஓர் இந்திய மொழி அவ்வாறு ஆக்கப்பட்டாலும், அவ்வாறு ஆக்கப்படக்கூடிய இந்திய மொழி நீங்கலாக மற்ற இந்திய மொழிகளுக்கெல்லாம் ஏற்படக்கூடிய கேடு, ஒன்ருகத்தான் இருந்திடும்.

'இந்திய மொழிகள் பாட மொழிகளாக ஆக்கப்பட வேண்டும்' என்ற இந்தி வெறியர்களின் பிரசாரத்திலும் முயற்சியிலும் பயங்கரமான உண்மை மறைந்திருக்கிறது. ஆங்கிலத்தின் இடத்தை இந்திய மொழிகளுக்குத் தேடித்தருவது என இப்பொழுது கோவிந்த தாஸ் போன்ற இந்தி வெறியர்கள் பேசுவதெல்லாம், இறுதியாக இந்தி மொழிக்கு ஆதிக்கம் தேடிக்கொள்ளுவதையே மூலநோக்கமாகக் கொண்டிருப்பதாகும். எனவே, கோவிந்த தாஸ் போன்ற இந்தி வெறியர்களும், அவர்கள் ஆதரவாளர்களும் இந்திய மொழிகளுக்குப் பரிந்து பேசுவதில் நாணயமுமில்லை—நேர்மையுமில்லை.

இந்தி வெறியர்கள்—ஆதரவாளர்கள் பேசி வருகின்ற இப்பேச்சு, இந்தி பேசாத பகுதி மக்களைக் கழுத்தறுக்கும் முதல்தரமான சதியாகும். இச்சதியை, இந்தி பேசாத பகுதி மக்கள் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும்.

—கா. க.

'உழவுத் தொழிலை இலாபமுள்ளதாக்கிக் காட்டுவோம்'

'சமூகத்தில் நீதியும் பொருளாதாரத்தில் நிம்மதியும் ஏற்படுத்துவோம்'

கிராம மக்களிடையே அறிஞர் அண்ணு சூளுரை

" பயிரைப் பூச்சி அரித்துவிட்டது; பயிர் செய்யத் தண்ணீர் இல்லை—என்கிற நிலையை இன்னும் சில ஆண்டுகளில் நிச்சயமாகப் போக்குவோம்!

" விவசாயம் என்ருல் 'இலாபகரமான தொழில்' என்னும் அளவுக்கு ஆக்கிக்காட்டுவோம்!

"20 ஆண்டுக்காலக் காங்கிரசு ஆட்சியின் அவல நிலையை நீக்கி, பல முனையிலும் நாம் முன்னேற்றத்தைக் காட்டுவோம்!

" அதற்கான திறம் — வலிமை — அறிவு — இயற்கைச் செல்வம் அத்தனையும் நம்மிடையே உள்ளன! இதன் மூலம் சமூகத்திலே நீதியும், பொருளாதாரத்தில் நிம்மதியும் ஏற்படத் தமிழக அரசு பாடுபடும். அதற்கான முயற்சிக்கு நீங்களெல்லாம் உறுதுணையாக இருக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன் "

என்று அறிஞர் அண்ணு அவர்கள் எச்யனூர் தி.மு.க. பணிமனைத் திறப்புவிழாவில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்கள்.

இராணிப்பேட்டைத் தொகுதி எசயனூர் தி.மு.க. பணிமனைத் திறப்புவிழா, 12—11—67 அன்று நடைபெற்றது.

புலவர் கோவிந்தன் (சட்டமன்றத் துணைத் தலைவர்), மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், திரு. கபூர், திரு. வீராசாமி, திரு. அரங்கநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஊர்தோறும் அவர்கள் இருப்பதால்தான்...!

பணிமனையைத் திறந்துவைத்து அறிஞர் அண்ணு அவர்கள் பேசியதாவது :—

"இந்தச் சிற்றூரில் கழகத்திற்கென ஒரு கட்டிடம் எழுப்பி ஒரு பெரும் விழாவாகக் கொண்டாடுகிறீர்கள். இந்த அழகிய கட்டிடத்தைக் கட்ட உறுதுணையாக இருந்த பெரியவர்களுக்கு நன்றி செலுத்துகிறேன்.

வடாற்காடு மாவட்டத்தின் ஒவ்வொரு கிராமமும்—தமிழறிந்த புலவர்களையும், தமிழார்வம் மிக்க பெரியோர்களையும் பெற்றிருக்கிறது. அத்தகையவர்கள் ஊர்தோறும் இருப்பதால்தான், கழகத்தைச் சீரும் சிறப்புமாகப் போற்றி வளர்த்து அதைக் காத்தும் வருகிருர்கள்!

கழகம் என்றும் நிலைத்திருக்க இப்படிப்பட்ட கட்டிடங்களை எழுப்பி உதவிவருகிருர்கள்!

இட்டுக்கட்டிப் பேசினுல் என்ன பயன் விளையும் ?

காங்கிரசார், கிராம மக்களிடம் வேண்டாததைச் சொல்லியும் இட்டுக்கட்டியும் பேசிவருகிருர்கள்.

விவசாயிகளிடம், நெல் விலையை உயர்த்தக் கோரும்படித் தூண்டிவருகிருர்கள்.

இன்று நம்மிடையேயுள்ள பிரச்சினை, 'மூட்டை நெல்லுக்கு ஓர் ஐந்து ரூபாய் உயர்த்திக் கொடுப்பதா அல்லது 20 மூட்டை விளையும் நிலத்தில் 30 மூட்டை விளைய முனைவதா ?' என்பதே ஆகும்.

விவசாயம், கைத்தறித் தொழில் ஆகிய இரண்டையும் வைத்துக் கொண்டு 100-க்கு 80 பேர் கிராமங்களில் வாழ்கிருர்கள். ஆகவே, விவசாயத்தில் நாம் முன்னேறியாக வேண்டும்; எனவேதான், 'விளைவைப் பெருக்க வேண்டும்' என்கிருேம்!

எதில் உண்டு மகிழ்ச்சி ?

40 வயதாகியும் குழந்தை இல்லாத ஒருவர், தனக்கு வேண்டியதை வாங்கிவர வேலைக்காரியைக் கடைக்கு அனுப்பவேண்டியுள்ளது. அதே மனிதருக்குப் பிறக்க வேண்டிய வயதில் குழந்தை பிறந்து—தற்போது 20 வயது வாலிபப் பிள்ளை இருக்கிருன் என்ருல், எவ்வளவு மனம் மகிழும்? 'நமக்கென்று இருக்கும் பிள்ளை' என்று எண்ணி எண்ணி மனம் மகிழ்வார்.

அதுபோல், நாம் உழைத்து உற்பத்தியைப் பெருக்கிக் காட்ட வேண்டும்; விளைந்தவற்றிற்கு அதிகம் கிடைக்குமா என்பதிலே அவ்வளவு மகிழ்ச்சி ஏற்படாது!

விவசாயத் தொழிலில் நாளெல்லாம் பாடுபடுகிருேம்; இருந்தாலும், அதனை பலன் உள்ள தொழிலாக்க முடியவில்லை!

அமெரிக்க நாட்டில் விவசாயிகள், தாங்கள் உழைப்பதில் சாப்பிட்டு — தங்கள் நாட்டிற்குப் போக மீதியை வெளிநாட்டிற்கு இலவசமாகவும், கடனுகவும் கொடுக்கிருர்கள்.

அமெரிக்காவில் விவசாயிகள் 100-க்கு 10 பேர்தான்; நம் நாட்டில் 100-க்கு 80 பேர் இருக்கிருர்கள்; இப்படி இருந்தும், நாம் அவர்களை உணவு அனுப்பும்படி கேட்கிருேம்; காரணம் என்ன ?

இருபது ஆண்டுகளாக இந்த நாட்டை ஆண்ட கட்சியினர் பெரிய பெரிய அணைகளையும், கட்டிடங்களையும் கட்டிக்கொண்டிருந்துவிட்டார்கள்! ஆனுல், ஏழை விவசாயிகளை முன்னேற்றமடையச் செய்யவில்லை!

விவசாயத்திற்குத் தண்ணீர் வேண்டும்; தண்ணீருக்குக் கிணறு வேண்டும்; கிணறு வெட்டப் பணம் வேண்டும் என்று எண்ணுமல் கடனுக வாங்கிய பணத்தையெல்லாம் அமெரிக்காவில் உள்ளதுபோல உயர்ந்த கட்டிடங்களையும், பெரிய தொழிற்சாலைகளையும் கட்டிச் செலவழித்தார்கள்.

ஆனுல் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு, உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்பதற்காக, தஞ்சை மாவட்டத்தில் தீவிரமாக முயற்சி செய்து, நெல் விளைவை இரட்டிப்பாக்கியிருக்கிருேம்.

அவல நிலையில் நாட்டை விட்டுச் சென்றனர்!

1967 பிப்ரவரித் தேர்தலில் நம்மவர்கள் 138 பேர் வெற்றிபெற்றதும், உண்மையிலேயே மிகவும் கவலைப்பட்டவன் நான்; 'நாட்டு மக்கள் இவ்வளவு நம்பிக்கையை நம்மீது வைத்திருக்கிருர்களே' என்பதை உணர்ந்துகொண்டேன்; பதவி ஏற்கும் அதே நேரத்தில், '20 ஆண்டுகளாக ஆண்டவர்கள் நாட்டை இந்த அவல நிலையில் விட்டுச்செல்கிருர்களே; நாம் எதை—எப்படிச் செய்யப்போகிருேம்' என்று கவலைப்பட்டேன்!

உங்களைப் போன்றவர்களின் பேராதரவால்தான், '100 பேர் வெற்றி பெறுவோம்' என்று எண்ணியிருந்தும், 138 பேர்களாக வெற்றிபெற்ருேம்!

மீண்டும் பதில் கூறினர் பக்தவத்சலத்திற்கு !

நவம்பர் 7-ந் தேதியன்று—மீண்டும் சென்னை மக்கள், சிறப்பான ஆதரவு தந்தார்கள்; இடைத் தேர்தலில் வெற்றி பெற்ருேம். 'ஒருமுறை செய்தால் போதாது' என்று மீண்டும் பக்தவத்சலத்திற்குப் பதில் கூறும் வகையில் நாட்டு மக்கள், 'நாங்கள் போதையில் இல்லை; அறிவுத் தெளிவோடுதான் இருக்கிருேம்' என்று நிரூபித்தார்கள்!

பொறுக்க இயலாதாம் காங்கிரசுக்காரர்களால் !

நம்மையும், கழக ஆட்சியையும் பார்த்து, 'என்ன செய்துவிட்டீர்கள் ?'—என்று கேட்கும் காங்கிரசாரின் 20 ஆண்டுக்கால ஆட்சியில், எவ்வளவு மக்கள் இதே கேள்வியைக் கேட்டுச் சலித்துப் போனுர்கள் ?

குறுகிய காலத்தில் கழகம் சாதித்ததை, அவர்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை!

கட்சியின் வளர்ச்சிக்குப் பாடுபட முனைவீர் !

ஒரு கட்சி ஆட்சிக்கு வந்ததும், ஆட்சியைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தால், கட்சியும் கரைய ஆரமபிக்கும்!

இந்தச் சிற்றூரில் கழகம் இருந்தால்தான், கழக ஆட்சியும் சிறந்து விளங்கமுடியும், ஆகவே கட்சியின் வளர்ச்சியையும் நாம் பாதுகாக்க வேண்டும்.

1957-ம் ஆண்டுதான் நாம் தேர்தலிலே முதன்முதலாக ஈடுபட்டோம்.

இன்று நாட்டு மக்கள் கழகத்திடம் வைத்திருக்கும் நம்பிக்கை அளவிட முடியாத ஒன்ருகும்!

15 ஆண்டுகளில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளக் கழகத்திற்கு கட்டளையிட்டவர்கள் மக்கள்!

வளர்ச்சிக்கு நாம் ஏற்ற கொடுமை கொஞ்சமா ?

கிராமங்களில் கழகம் வளரவில்லை என்று சொல்லி வந்ததிலும் ஓரளவு உண்மை இருந்தது; ஆனுல் இன்று, நகரத்தைவிட கிராமங்களில் வேரூன்றி இருப்பதைக் காண்கிறேன்!

'நகரங்கள் ஆதரிக்கின்றனவா—கிராமங்கள் ஆதரிக்கின்றனவா என்று இல்லாமல், எல்லா இடங்களிலும் கழகம் ஆதரவு பெற்றதை, சென்ற தேர்தலில் கண்டோம்!

இத்தகைய வளர்ச்சிக்கு எத்தகைய தியாகங்களைச் செய்திருக்கிருேம் என்பதையெல்லாம் பல முறை எடுத்துச் சொல்லியிருக்கிருேம்.

எத்தனையோ கழகத் தோழர்கள் உயிரைக் கொடுத்திருக்கிருர்கள்!

காங்கிரசு ஆட்சியில் !

என்னையும், நண்பர்களையும் பல முறை சிறையிலிட்டிருக்கிருர்கள்!

விலைவாசி உயர்வை எதிர்த்து நானும் நண்பர்களும் மறியல் செய்து வேலூர் சிறையிலிருந்த போது, மதுரைச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த பொற்செழியன் எனகிற தோழர் திடீரெனச் செத்துவிட்டதாகச் சொன்னுர்கள்! பலவேறு சிறைகளில் அடைக்கப்பட்டிருந்த நூற்றுக்கணக்கான தோழர்கள் நடைபிணமாக வெளியே வந்தார்கள்!

சென்னைச் சிறையிலிருந்து கோ. சு. மணி என்னும் தோழர் நடைபிணமாகக்கூட அல்லாமல் பிணமாகத்தான் வெளியே அனுப்பப்பட்டார்!

ஆயிரக்கணக்கானவர்கள், சொத்தையும் சுகத்தையும் இழந்திருக்கிருர்கள்!

பல்லாயிரக்கணக்கானவர்கள் பட்ட துன்பங்கள் சொல்லி முடியாது!

(3-ம் பககம் பார்க்க)

அநீதியையும் ஆதிக்கத்தையும் ஏற்றுக்கொள்ள இயலாது!

மொழிப் பிரச்சினையில் மக்களின் வலிவுமிக்க கருத்தையே தமிழக அரசு பிரதிபலிக்கிறது!

நிலைக்க முடியா வாதங்களைக் கூறி வீராப்புப் பேசுவோர் நிலையை உணராதவர்கள்---ஆதிபத்தியத்திற்குத் துணை போகிறவர்கள்!

பட்டமளிப்பு விழாப் பேருரையில் முதலமைச்சர் அறிஞர் அண்ணா தெளிவுரை

"நமது காலத்திலுள்ள விசித்திரமான இன்னோர் உண்மை, நாம் இப்போது ஒரு நாட்டை உருவாக்கிக்கொண்டிருக்கிறோம் என்பது! 'ஒருமைப்பாடு ஏற்படவேண்டும்' என நினைப்பவர்களுக்கு உள்ளபடியே அந்தக் கருத்தில் ஆர்வம் இருக்கிறது என்றால், அந்தக் கருத்தைத் தெளிவாக இங்கு எடுத்துரைக்க வேண்டும்.

"ஒற்றுமைக்கும்—ஒரே தன்மைக்குமுள்ள வேறுபாடு புரியாது சிலர் குழப்பிக்கொள்கிறார்கள்; 'ஒற்றுமை' என்ற பெயரில் நாட்டின் ஒரு பகுதி மற்றொரு பகுதியின் அடிமைப் பண்ணையாக மாறுவதற்கு, தெரிந்தோ தெரியாமலோ அனுமதிக்கக்கூடாது! எவ்வளவுதான் உயர்ந்த இலட்சியமாக இருந்தாலும், நாம் அதற்காகத் தவறான செயல் முறையைப் பின்பற்றுவோரில் ஒருவராக இருக்க முடியாது!"

இவ்வாறு முதலமைச்சர் அண்ணா அவர்கள், அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாப் பேருரையில் விளக்கிக் கூறினார்; தமிழக அரசின் குறிக்கோள்களை விளக்கி அவர் பேசுகையில், இத்துறையில் மிரட்டல்கள் மூலம் தங்கள் குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்ள முனைபவர்களுக்கும் அறிவுரை வழங்குகையில் குறிப்பிட்டதாவது:—

சுதந்தர நாளின்போது இராஜாஜி அவர்கள், தமக்கே உரிய நுண்மான் நுழைபுலத்துடன் கூறினார்கள்:—

"நமது நாட்டின் அரசியல் அனுபவம், இரும்பையும் உலோகங்களையும் உருக்கி வார்ப்படத்தில் வார்த்து, தேய்மானத்திற்கு அஞ்சாத உருக்குச் செய்வது போன்றதாகும்!

"இது சில நாடுகளில் உருவாகியுள்ள சைனா பீங்கான் போன்றதல்ல; அந்த நாட்டினரின் சனநாயகமெல்லாம், பிளாஸ்டிக் செய்வதுபோல் எளிதில் செய்துவிடக்கூடியது; ஆனால் நமக்கு இங்கே ஈடுபாடு—உலோகங்களிடம்"

"தேசிய ஒருமைப்பாடு என்பது நல்ல குறிக்கோள்—மதிக்கத்தக்கது; எனினும், அதற்காக மொழித்துறையிலோ—பொருளாதாரத் துறையிலோ அநீதியையும் ஆதிக்கத்தையும் சகித்துக்கொள்ள முடியுமா? 'சகித்துக்கொள்ள முடியாது' என்பதற்காகத்தான் இந்த (தமிழக) அரசாங்கமே ஏற்பட்டிருக்கிறது!

இந்தியை ஆட்சிமொழியாக ஏற்குமாறு கட்டாயப்படுத்துவதற்கு எதிராக—மக்களின் வலிவுமிக்க உறுதிப்பாட்டையே தமிழக அரசு பிரதிபலிக்கிறது!

நாம், 'ஆங்கிலம் இணைப்பு மொழியாக நீடிக்கவேண்டும்' என்று கூறுவதைச் சிலர் தவறாகவும், திரித்தும் கூறுகிறார்கள்; நிலைக்க முடியாத வாதங்களையும், விவாதத்திற்குரிய புள்ளிவிவரங்களையும் காட்டி அவர்கள் வீராப்புப் பேசியபடி பிரிவினைப் பூச்சாண்டியைக் கொண்டுவந்து மிரட்டல்கள், இராணுவம் ஆகியவற்றின் மூலம் மக்களை மௌனமாக்க முயலுகின்றனர்! பிரச்சினைகளை ஆதிபத்திய முறைகளில் எப்போதும் தீர்க்க முடியாது!

குறிப்பாக இந்த மொழிப் பிரச்சினை, நமது வாழ்க்கை வழியுடன் நிகழ்காலத்திலும், எதிர்காலத்திலும் நெருக்கமாக இணைந்துள்ளதாகும்.

தமிழும் ஆங்கிலமும் நமது எல்லாத் தேவைகளையும் நிறைவு செய்யும் என்பதைத் தமிழக அரசு திட்டவட்டமாக விளக்கியிருக்கிறது.

தமிழ் இந்த மாநிலத்தின் ஆட்சிமொழியாகவும், ஆங்கிலம் இணைப்பு மொழியாகவும் இருக்கவேண்டும்.

ஏன் அப்படிக் கேட்கின்றனர்?

'ஆங்கிலம், நமது நாட்டிற்கும்—உலகின் பிற நாடுகளுக்குமிடையே இணைப்பு ஏற்படுத்தப் பணிபுரியும்' என்று இந்தி ஆதரவாளர்கள்கூட ஒப்புக்கொள்கிறார்கள்; அதை அவர்கள் ஒப்புக்கொள்வார்களானால், இங்கு இணைப்பு ஏற்படுத்த, 'இந்தி இணைப்பு மொழியாக இருக்கவேண்டும்' என்று ஏன கேட்கிறார்கள்?

வெளிநாட்டினருடன் இணைப்புக்கொள்ள எந்த மொழி பணியாற்றுகிறதோ அதே மொழி, அதே இணைப்புப் பணியை இந்தியாவுக்குள்ளும் செய்யும் ஆற்றல் பெற்றிருக்கிறது!

'இரு இணைப்பு மொழிகள் தேவை' என்று கூறுவது, பெரிய பூனை செல்வதற்குப் பெரிய வழி சுவரில் இருக்கும்போது—'பூனைக்குட்டி செல்ல இன்னொரு வழி செய்யவேண்டும்' என்பதற்கு ஒப்பானதாகும்! பூனைக்கு என்ன வழியோ—அது, பூனைக்குட்டிக்கும் வழியாகும்!

அதனை மட்டும் பெறுவது ஏனோ?

'ஆங்கிலம் அந்நிய நாட்டு மொழி' என்று சிலர் வாதிடுகிறார்கள்; அந்நிய நாட்டுக் கோதுமையை, அந்நிய நாட்டுக் கப்பல்களில் கொண்டுவருகிறோம்; நாம் அந்நிய உதவியைப் பணமாக மட்டுமல்ல—தொழில்நுட்ப உருவிலும் வேண்டுகிறோம்.

'நமது தலைவர்கள் ஒருவர் மாற்றி ஒருவர் மேற்கு நாடுகளுக்கும், கிழக்கு நாடுகளுக்கும் சென்று, எத்தகைய உதவி கிடைக்கிறதோ அதை—முடிந்த அளவுபெற முயலுகிறார்கள்' என்ற செய்தி இல்லாமல், ஒரு வாரம்கூட நகருவதில்லை!

இதற்கெல்லாம் மேலாக, நமக்கென்று தனியாக இருந்த சில முறை துறைகளைக்கூடக் கைவிட்டு இருக்கிறோம்!

கிராமப்புறப் பொருளாதாரத்தை மட்டும் நாம் நம்பியிருக்கவில்லை; டிராம்பே (அணுசக்தி நிலையம்), எண்ணூர் (அனல் மின்சார நிலையம்) ஆகியவை அமையவேண்டும் என்று விரும்புகிறோம்.

அவை மட்டும், 'அந்நியத்தன்மை வாய்ந்தது' என்று நாம் உணரவில்லை; ஆனால், மொழித் துறையில் மட்டும் நாம் மிகத் தீவிரமான தேசியவாதிகளாக வெளிக்காட்டிக் கொள்கிறோம்! 'ஆங்கிலம் அந்நிய மொழி' என்று பகட்டுக் காட்டுகிறோம்!

உள்ளபடியே (இலக்கிய நோக்கில்) ஷெல்லி—பைரன்-கீட்ஸ்-கால்ரிட்ஜ்—எமர்சன்—பேகன்—ஆகியோர் நமக்கு அந்நியர்களா? திருவள்ளுவர் வெறும் தமிழர் மட்டுமா? அவர்கள் எல்லாம் உலகக் குடிமக்கள்—உலகப் பேராசிரியர்கள்!

அவர்களது எண்ணங்களை மிளிரச் செய்யும் மொழிகள் வேறு நாட்டிலிருந்து வருகிறது என்பதால், தள்ளிவிடக்கூடியவை அல்ல!

எனினும், தமிழ் மொழியைக் கல்லூரிப் பாட மொழியாக ஆக்கத் தேவையான கவனத்துடன் படிப்படியாகச் செய்யும் கொள்கையை ஏற்றுச் செயல்படுத்துவதால், ஆங்கிலத்திற்குத் தமிழை விட உயர்ந்த இடம் தந்துவிடமாட்டோம்?

திருச்சியில் முரசொலி மாறனுக்கு மாபெரும் பாராட்டு

அமைச்சர் ஏ. கோவிந்தசாமி மற்றும் தோழர்கள் கலந்துகொண்டனர்

திருச்சி, நவ. 18—

இன்று மாலை 7-மணியளவில் திருச்சி டவுன் ஹால் திடலில், திருச்சி மாவட்ட தி. மு. க. சார்பில் தென் சென்னை வெற்றி வீரர் முரசொலி மாறன் அவர்களுக்குப் பாராட்டுப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

மாவட்டச் செயலாளர் அன்பில் தர்மலிங்கம் தலைமைதாங்கினார்.

புலவர் அருணா, வையாளி, பரமத்தி சண்முகம், நகரச் செயலாளர் அ நடராசன், பராங்குசம், சட்டமன்ற உறுப்பினர்கள் து. ப. அழகமுத்து, எம். எஸ். மணி, முத்துச்செல்வன், ஆர். நாகசுந்தரம் ஆகியோர் பேசியபின், முரசொலி மாறன் நன்றி தெரிவித்துப் பேசினார்.

இறுதியில் வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி அவர்கள் அரியதோர் உரை நிகழ்த்தினார்.

மாறன் அவர்களுக்கு மாவட்ட தி. மு. க., வட்ட தி. மு. கழகங்கள் சார்பில் வரவேற்பும, பாராட்டும் அளிக்கப்பட்டன.

நாதன் கம்பெனி உரிமையாளர் பாண்டுரங்கன், உதய சூரியன் பொறித்த தங்க மோதிரம் ஒன்றை மாறன் அவர்களுக்கு அன்பளிப்பாக அணிவித்தார்.

தோழர் மாறன் பேசும்போது குறிப்பிட்டதாவது:—

"எனக்கு அளிக்கப்பட்ட வரவேற்பும் பாராட்டும் எனக்கு மட்டுமல்ல—உங்கள் ஒவ்வொருவருக்கும் தரப்பட்டதாகும்.

தென் சென்னை வெற்றி என்பது புதிதாக ஏற்பட்டதல்ல; முன்னரே அளிக்கப்பட்ட தீர்ப்பின்மீது நான் மறுபடியும் அறிஞர் அண்ணா அவர்களால் சுட்டிக்காட்டப்பட்ட ஓர் அடையாளம்தான்!

ஒரு வகையில் தென் சென்னை இடைத் தேர்தல், ஓர் இடைத் தேர்தலாக அல்லாமல் ஏழு மாத கால அண்ணாவின் ஆட்சிக்கும், காமராசரின் காங்கிரசுக்குமான ஒரு எடைத் தேர்தலாகவே இருந்தது.

நான் டெல்லிக்குப் போகிறேன்—காமராசர் அங்கிருந்து திரும்பப் பயணமாகிக் கொண்டிருக்கிறார்! இந்த மாறுதலை உண்டாக்கித் தந்தவர் நம் அண்ணா அவர்கள்தான்!"

அமைச்சர் ஏ. கோவிந்தசாமி

வேளாண்மை அமைச்சர் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"தென் சென்னை இடைத் தேர்தல் முடிவை எதிர்த்து எதிர்க்கட்சியினர் வழக்குப் போடப் போவதாகப் பத்திரிகையில் பார்த்தேன்.

அவர்கள் அப்படி வழக்குப் போடுவதிருக்கட்டும்; எதிர்க் கட்சித் தலைவர் அண்மையில், 'தீ விபத்து நிவாரண நிதியைத் தென் சென்னைத் தேர்தலுக்குப் பயன்படுத்தினர்' எனப் பேசியுள்ளாரே—அதன்மீது வழக்குப் போடுவது பற்றி யோசித்து வருகிறோம்' என்பதை உணரட்டும்."

உழவுத் தொழிலை...

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஒரு வீட்டில் ஒரு வாலிபர், அப்போது நமது கூட்டத்திற்குச் செல்வதென்றால், எத்தனைப் பொய் சொல்லிவிட்டுப் போவார்! திரும்பி வந்ததும், வீட்டிலுள்ள பெரியவர்களிடம் எத்தனைக் கேள்விக் கணைகளைச் சந்தித்திருப்பார்!

அதே வாலிபர் இன்று கூட்டத்திற்குப் போனால், வீட்டுப் பெரியவரும், 'நானும் வருகிறேன்' என்று புறப்படுவதைப் பார்க்கிறோம்!

'எதைப் பிடிக்கப் போயிருந்தாய்?' என்று அன்று பெரியவர் கேட்டார்; 'கோட்டையைப் பிடித்துவிட்டோம் — பார்த்தாயா?' என்று இன்று வாலிபர் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார்!

ஆகவே, உங்களைப் போன்றவர்களின் ஒத்துழைப்பு இருந்தால்தான், கழக ஆட்சியும் வலுவுள்ளதாக இருக்கமுடியும்.

கணக்குப் பார்க்கும் காலமல்ல இது!

காங்கிரசார் கேட்பதுபோல், '6 மாத ஆட்சிக் காலம்' கணக்குப் பார்க்கும் காலம் அல்ல!

5 ஆண்டுகள் கழித்து உங்களிடம் ஓட்டுக்கு வரும்போது, எங்களுடைய சாதனையைச் சொல்வோம்—நீங்களும் ஆதரிக்க வேண்டும்.

அவர் சொல்லிவிட்டாரே — இவர் வேண்டிவேண்டிக் கேட்டாரே—கால் என்று சொல்லி கையைப் பிடித்தாரே—நமது வகுப்பைச் சார்ந்தவராயிற்றே—என்று கருதினால், சனநாயகம் பிழைக்காது!

நாங்கள் ஆட்சிக்கு வந்ததும் உணவுப் பற்றாக்குறையைத் தீர்த்திருக்கிறோம்!

ஆனால் இன்றையத் தினம் அத்தகைய நிலைமை இல்லை. பற்றாக்குறை தீர்ந்ததென்றால், முழுதும் தீர்ந்ததாக நான் சொல்லவில்லை—'ஓரளவுக்குத் தீர்த்திருக்கிறோம்' என்றுதான் சொல்கிறேன்.

உடனடியாக அல்ல---சிறிது சிறிதாகத்தான்!

யாரையாவது தேள் கொட்டிவிட்டால், பூசாரி மந்திரிக்கிறபோதே வலி போய்விடாது; உடல் முழுதும் பரவிய விஷம் இறங்கி வரவேண்டும்.

அதேபோல், பஞ்சத்தை—பற்றாக்குறையை, 'உடனே ஒழிப்பேன்' என்று சொல்லும் மாயா ஜாலப் பூசாரி நான் அல்ல!

இருபது, ஆண்டு ஆட்சியில் ஏறிய விஷத்தை, சிறிது சிறிதாகத்தான் இறக்கவேண்டும்!

கிராமத்திலே யாரையாவது பிசாசுப் பிடித்திருந்தால், 'அது எந்தப் பிசாசு' என்று கண்டுபிடிக்கவே பூசாரிக்குப் பல நாட்கள் ஆகும்; அதுபோல், 20 ஆண்டுகளாக நாட்டைப் பிடித்துக்கொண்டிருக்கும் பிசாசை, கண்டுபிடித்துத்தான் ஓட்டவேண்டும்! இதையும் படிப்படியாகத்தான் செய்ய வேண்டும்!

நாட்டு மக்கள் முன்னேற்றத்திற்காக நாம் செய்துவரும் காரியங்களை, இந்தியப் பத்திரிகைகள் அனைத்தும் பாராட்டுகின்றன; வெளிநாட்டிலிருந்து வருபவர்கள் எல்லாம் பார்த்துவிட்டுப் பாராட்டுகிறார்கள்.

இப்படி நாமும் நமது கழகமும் புகழ்பெற இன்னும் நாம் முனைந்து உழைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்."

‘தர்ம’மா? ‘வீர’மா?

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நக்சல்பாரி கலவரங்களின் போதெல்லாம் ‘அமைதி’யாக இருந்த புதுடில்லி, நந்தாவின் கல்கத்தா ‘விஜய’த்துக்குப் பின்னர் —நவம்பர் 2-ந் தேதி டாக்டர் கோஷ் பதவி விலகிய பின்னர் மட்டும் அசாத்தியச் சுறுசுறுப்புடன் இயங்கிவந்திருப்பதனைப் புரிந்து கொள்ள முடியாத அளவுக்குப் பொதுமக்களுக்கு அரசியல் உணர்ச்சி பஞ்சமடைந்துவிடவில்லை !

“கவர்னரது அதிகாரம், நீதிமன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவுக்கும் உட்பட்டதல்ல” என்ற அஜாய் முகர்ஜியின் கோரிக்கை பற்றி நாடாளுமன்றத்தில், நேற்று, சவாண் ‘வீர உரை’ ஆற்றிய போது, அரசியல் பார்வையாளர்கள் சந்தேகப்பட்டனர்—“கல்கத்தாவில் ‘இரண்டாம் காட்சி’ துவங்க இருக்கிறது” என்று !

ஆனால் அது, ‘நேற்று இரவே நடைபெறும்’ என்பது, எவரும் எதிர்பார்த்திராத ஒன்று !

“கவர்னர்களுக்கு முழுச் சுதந்தரம் உண்டு; அவர்களது நடவடிக்கைகள் நீதிமன்றத்தின் பார்வைக்கு அப்பாற்பட்டது தான்” என்று சவாண் கூறியது உண்மைதான் என்றால், மேற்கு வங்கக் கவர்னரின் செயலில் தர்மமும் வீரமும் காணப்பட்டிருக்க வேண்டும் !

அஜாய் முகர்ஜிக்கு அவகாசம் தந்திருப்பாரானால், கவர்னரின் நடவடிக்கையில் தர்மம் இருந்திருக்கும் !

அதற்குப் பின்னரும், அஜாய் முகர்ஜியின் அமைச்சரவைக்குப் போதிய சக்தி—நீடிப்புத் தன்மை இல்லை என்பதனை வெளி உலகுக்குக் காட்டி, பின்னர் தனது அதிகாரத்தைப் பிரயோகித்திருப்பாரானால் அதில் வீரம் இருந்திருக்கும் !

வங்காளத்துத் ‘தர்ம வீரா’, பெயரில்தான் கவர்னராக இருக்கிறார்! பெயருக்குப் பொருத்தமான கவர்னராக இல்லை !

—எஸ். ஆர்.

ஆயா ராம் ரூ. 20,000-- கயா ராம் ரூ. 40,000!

அடிக்கடி கட்சி மாறும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அரியானா மாநிலத்து மக்கள், வேடிக்கையான பெயர்களைச் சூட்டியிருக்கிறார்கள் !

‘ஆயா ராம்’ என்றும், ‘கயா ராம்’ என்றும் அழைக்கப்படும் அத்தகைய நடமாடும் உறுப்பினர்களுக்கு, ‘கட்சி மாறுவதற்காக’ என்று விலையும் தரப்படுகிறது !

ஆயா ராம் என்பவர் ரூ 20,000 பெறுகிறார் !

‘கயா ராம்’ எனப்படுவோருக்கு ரூ. 40,000 தரப்படுகிறது !

பெருத்த சிரிப்பொலிக்கிடையில் உள்துறை அமைச்சர் சவாண், நாடாளுமன்றத்தில் இத்தகவலை வெளியிட்டிருக்கிறார்.

நடக்க இருப்பவை

24--11--67

சென்னை 92-வது வட்டம்

முத்தமிழ் மன்றச் சார்பில் இரவு 7-மணிக்கு அண்ணா நகரில்; தலைவர்: காஞ்சி மணிமொழியார்; பேசுவோர்: அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், என். வி. நடராசன் எம்.எல்.சி., மா. செங்குட்டுவன், இரா. சங்கரலிங்கம், நடிகர் வசந்தகுமார், கே. பி. தூயமணி, எம். விசுவநாதன், பி. ஏ. கணபதி, மா. இராசன், மு. தங்கையன், டி. கே.வைத்திலிங்கம், தனசேகரன்.

பஞ்சாபிய சிங்கம் தலைசாய்ந்தது!

தாராசிங் இயற்கை எய்தினர்

அகாலி தளத் தலைவர் மாஸ்டர் தாராசிங் இன்று காலை (நவ. 22) 1-30 மணியளவில் சண்டிகார் நகரில் மாரடைப்பினால் காலமானார். அவருக்கு வயது 81.

நாளை தகனம் செய்யப்படவிருக்கும் அவரது உடல், இன்று, அமிருதசரஸ் நோக்கி எடுத்துச் செல்லப்படுகிறது.

1886-ம் ஆண்டில் பிரிவினையாகாத பழைய பஞ்சாப் மாநிலத்தில் பிறந்த மாஸ்டர் தாராசிங், ஒரு கல்லூரிப் பட்டதாரி. இதழ்களுக்குக் கட்டுரைகள் எழுதுவதில் தனித் திறமை பெற்றவர்.

1947-க்கு முன்னர் நாட்டுக்காகப் போராடிச் சிறை சென்றது போலவே, சுதந்தரத்துக்குப் பின்னரும் தமது இன மக்களுக்காகவும், மாநில உரிமைகளுக்காகவும் சிறை சென்றிருக்கிறார்.

அவரது போராட்டங்களில் குறிப்பிடத்தக்கது, ‘பஞ்சாபி சுபா’ பற்றியதாகும்.

பள்ளி ஆசிரியராகவும் பணி புரிந்திருக்கும் மாஸ்டர் தாராசிங், கடந்த சனியன்று அறுவைச் சிகிச்சைக்குப்பின் குணமடைந்து வருவதாகக் கூறப்பட்டது.

டாக்டர் சிதம்பரநாதனர் மறைவு

தமிழகத்தின் தலைசிறந்த தமிழறிஞருள் ஒருவரும் மதுரைத் தியாகராசர் கல்லூரி முதல்வருமான டாக்டர் அ. சிதம்பரநாதன் (செட்டியார்) இயற்கையெய்திவிட்ட செய்தியை மிக்க வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

கடந்த திங்கட்கிழமையன்று கல்லூரிக்குச் சென்ற அவர், வீடே திரும்பவில்லை என்றும், அவரைக் காணாது தேடப்பட்ட நேரத்தில் இன்று, திருநகரில் உள்ள ஒரு குளத்தில் அவரது உடல் மிதந்தது கண்டுபிடிக்கப்பட்டது என்றும் தகவல் கிடைத்துள்ளது.

டாக்டர் அ. சிதம்பரநாதனர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியவர்.

பின்னர் தமிழகச் சட்டமன்ற மேலவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சென்னைப் பல்கலைக்கழகம் தொகுத்த ஆங்கில — தமிழ் அகராதிக்குத் தலைமை ஆசிரியராக இருந்து சிறந்த முறையில் அகராதியைத் தொகுத்தளித்திருக்கிறார்.

தமிழிலும்—ஆங்கிலத்திலும் சிறந்த புலமை பெற்றுள்ள இவர், நாவன்மைமிக்க சொற்பொழிவாளரும், எழுத்தாளருமாவார். அமெரிக்கா முதலிய மேலை நாடுகளுக்கும் இவர் சென்று சொற்பொழிவுகள் நிகழ்த்தி வந்திருக்கிறார்.

இவர், தஞ்சை மாவட்டம் கும்பகோணத்தில் பிறந்தவர். வயது 60.

அண்மையில்தான் மணிவிழா கொண்டாடப்பட்டது.

டாக்டர் சிதம்பரநாதனாரைப் பிரிந்து துயருறும் அவர்தம் குடும்பத்தாருக்கும், தமிழ்ப் பெருமக்களுக்கும் நமது ஆழ்ந்த பரிவும் ஆறுதலும் உரித்தாகுக. —(ஆ-ர்.)

‘ஆட்ட’த்தைக் கொடுத்த ‘நடமாட்டங்கள்’!

“சட்டை மாற்றுவதுபோல் அடிக்கடி கட்சி மாறியிருக்கிறார்கள்—அரியானா மாநிலத்தில் கலைக்கப்பட்டிருக்கும் சட்டமன்றத்தின் முன்னாள் உறுப்பினர்கள்!

“ஆளுங்கட்சியின் நடைமுறை பலம் 79 ஆக இருந்த அரியானா சட்டமன்றத்தில் ஏறக்குறைய 30 உறுப்பினர்கள் கட்சிவிட்டுக் கட்சி மாறி ‘நடமாட்டம்’ செய்திருக்கின்றனர் !

“ஒரு சில உறுப்பினர்கள், நான்கு தடவைகள்கூட ‘நடமாடி’ இருக்கின்றனர் !

“இந்த நிலையில், ‘மக்கள் நம்பிக்கையைப் பெற்ற கட்சி எது’ என்பதனை நிர்ணயிக்கவே முடியவில்லை !”

இவ்வாறு, அரியானா அமைச்சரவையைக் கலைத்ததற்கான விளக்கத்தில் கவர்னர் பி. என். சக்கரவர்த்தி குறிப்பிட்டிருக்கிறார்.

“சனநாயகம் பரிகசிப்புக்கு ஆளாகிவிட்டது; எனவேதான், அமைச்சரவை கலைக்கப்பட்டது”

என அந்தக் குறிப்பில் அவர் தெரிவித்துள்ளார்.

தீயினால் சேதம்-- வெள்ளத்தினால் பாழ் !

இருவகை அழிவுகளை ஒரு சேர அனுபவித்தது குவெய்த் !

500 தீயணைப்புப் படையினர் 17 மணி நேரம் தொடர்ந்து போராடி, நூற்றுக்கணக்கான கார்கள் நிறுத்திவைக்கப்பட்டிருந்த நிலையத்தில் பிடித்திருந்த தீயினை அழித்தார்கள் !

குவெய்த்தில் நேற்று (நவ. 20) இந்த விபத்து நடந்த ஏறக்குறைய இதே நேரத்தில், மற்றைய தெருக்கள் பல, பெரும் மழை—வெள்ளத்தினால் பாழடிக்கப்பட்டிருக்கின்றன !

“கடந்த ஒரு நூற்றுண்டில் இவ்வளவு பெரிய கனத்த மழை பெய்ததில்லை” என்று கூறப்படும் இச்சேதத்தினால், தெருக்களில் நான்கு அடி ஆழத்திற்கு வெள்ளம் ஓடியிருக்கிறது !

கட்டிடங்கள் இடிந்து வீழ்ந்தமையால், குவெய்த்தின் பள்ளிகளெல்லாம் மூடப்பட்டன ! விமான நிலையம் செயலற்று இருக்கிறது !

சர். பி. தியாகராயர் பெயரால் மாநகராட்சி விளையாட்டுத்திடல்

முதலமைச்சர் அண்ணா திறந்துவைப்பார்

சென்னை 22-வது வட்டம் கன்னி கோயில் தெருவில், மாநகராட்சி அமைத்துள்ள சர். பி. தியாகராயர் நினைவு விளையாட்டுத் திடலை அறிஞர் அண்ணா அவர்கள் திறந்துவைப்பார்கள் ; இந்த விழா 24—11—67 இரவு 7-மணிக்கு மேயர் இரா. சம்பந்தம் தலைமையிலும்—திரு. சி. காளாஸ்திரி (செட்டியார்) பி.ஏ., ஜே.பி. அவர்கள் முன்னிலையிலும் நடைபெறும்; வரவேற்புரை : ம. மோகனரங்கம் எம்.சி.

கல்கத்தா நகருக்குள்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

துள்ளது. சிறுபான்மையினரை ஆட்சியில் இப்போது அமர்த்தியுள்ளது, ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது !”

இரேன் முகர்ஜி (வலது கம்யூ)

“காங்கிரசு ஆட்சியாளர், தங்களுக்குத் தவருகக் கிடைத்த அரசியல் அதிகாரத்தை எப்படி வேண்டுமானாலும் பயன்படுத்துவார்கள் என்பதற்கு இது ஓர் உதாரணம்.”

நாத்பாய் (பி. சோ.)

“இந்த நடவடிக்கை, மேற்கு வங்கத்திலுள்ள பிரச்சினையைத் தீர்த்துவிடாது; காங்கிரசு மிகத் தவருன முன்னுதாரணத்தைச் செய்துள்ளது.”

நம்பூதிரிபாடு (இடது கம்யூ)

“இந்தச் செயலுக்கு எதிராக நாட்டிலுள்ள சனநாயக சக்திகள் அனைத்தும் சேர்ந்து ஒரு சேரக் குரல் எழுப்ப வேண்டும்.”

சென்னை --- டில்லி நேரடி தொலைபேசி வசதி

புதுடில்லி, நவ. 22—

“சென்னைக்கும்--புதுடில்லிக்கும் இடையே நேரடி ‘டிரங்க்’ டெலிபோன் தொடர்பு வசதி, வருகிற ஆண்டு இறுதியில் கிடைக்கும்”

என்று மக்களவையில் செய்தித் தொடர்புத் துறைத் துணை அமைச்சர் குஜ்ரால் கூறினார்.

புரட்சி நடிகருக்கு மாநகராட்சி வரவேற்பு

புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் எம்.எல்.ஏ. அவர்கட்கு, சென்னை மாநகராட்சி மன்றச் சார்பில், 23—11—67 மாலை 5-30 மணிக்கு ‘மை லேடீஸ்’ பூங்தோட்டத்தில் வரவேற்பு அளிக்கப்படும் ; மேயர் இரா. சம்பந்தம் வரவேற்பு மடலைப் படித்தளிப்பார்.

தமிழர்-கன்னடர் உறவு!

நிஜலிங்கப்பா பெருமிதம்

சென்னை, நவ. 22—

“தமிழ்நாட்டிற்கும் — கருநாடகத்திற்கும் உள்ள ஒற்றுமை மிகவும் நெருக்கமானது; தமிழ் இலக்கியமும்—கன்னட இலக்கியமும் ஒன்றுக்கு ஒன்று வேறுபடுத்திச் சொல்லமுடியாத அளவுக்கு ஒன்றுபட்டிருக்கின்றன; ‘வேதம்’ போன்ற திருக்குறளை எங்கள் மொழியில் மொழி பெயர்த்து நாங்கள் படிக்கிறோம்; அதேபோன்று எங்கள் மொழியில் திருக்குறளுக்கு ஒப்பான இலக்கியம் இருந்து அதை நீங்கள் உங்கள் மொழியில் மொழி பெயர்த்துப் படிக்கவேண்டும் என்பது என்னுடைய பேரவா ஆகும்”

என்று கருநாடக முதலமைச்சர் திரு. நிஜலிங்கப்பா, நேற்று மாலை சென்னை மாநகராட்சி ஆண்டு விழாவில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

ஜோதிபாசு கைது?

முன்வந்த வதந்தியும் பின்வந்த மறுப்பும் !

வங்கக் கூட்டணி அமைச்சரவை கலைக்கப்பட்டிருப்பதனையொட்டி எழுந்த கலவரங்களின்போது, முன்னாள் துணை அமைச்சர் ஜோதி பாசு கைது செய்யப்பட்டார் என்ற வதந்தியும் கல்கத்தா நகரில் காட்டுத் தீபோல் பரவியது !

ஆனால், பின்னர்வந்த செய்தியொன்று இதை மறுத்தது !

அனைத்திந்திய வானொலியின் இன்றையக் காலைச் செய்தி, இதனைத் தெளிவுபடுத்தியது !

அமைச்சர்

மா. முத்துசாமி உடல்நிலை

சென்னை, நவ. 22—

உள்ளாட்சித் துறையமைச்சர் திரு. மா. முத்துசாமி காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருப்பதால், ஒரு வார காலம் ஓய்வெடுத்துக் கொள்ளுமாறு டாக்டர்கள்கேட்டுக் கொண்டதன்பேரில், சுற்றுப்பயணத்தை ரத்து செய்துவிட்டு வீட்டில் ஓய்வுபெற்று வருகிறார்.

ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ‘விடுமுறை’

காங்கிரசார் எதிர்ப்பு!

புதுடில்லி, நவ. 21—

டிசம்பர் முதல் வாரத்தில் தேசிய வளர்ச்சிக் குழு இங்கு கூடும்போது, மாநில முதலமைச்சர்களின் கண்டனக் கணைகளுக்கு மத்திய அரசும், திட்டக் குழுவும் உள்ளாக நேரிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1969 ஏப்ரல்வரை ஐந்தாண்டுத் திட்டத்தைத் தள்ளி வைத்துவிட்டு, ஆண்டுத் திட்டத்தை வகுத்துச் செயலாக்க திட்டக் குழு முடிவு செய்ததற்குக் கடும் கண்டனம் தெரிவிக்கப்படலாம்.

அசோக் மேத்தா காலத்தில் வகுக்கப்பட்ட நான்காவது ஐந்தாண்டுத் திட்ட நகல், நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படவே இல்லை; திட்ட அமைச்சுத்துறை ஒழிக்கப்பட்ட பின்னர், பழைய நாடாளுமன்ற ஆலோசனைக் குழு தொடர்ந்து நீடிக்கிறதா, இல்லையா என்பது எம்.பி.-க்களுக்குத் தெளிவுபடவில்லை.

திட்டக் குழுவின் முடிவினை பல காங்கிரசுக்காரர்கள் கடுமையாக கண்டித்துவருகிறார்கள்.

(திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24- சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13 அச்சிட்டு வெளியிடப்படுகிறது.)